தஞ்சை சற்குண சதாரம்
சரித்திரம்

O-,892M8P,T
N21
184220

1921


[illegible]

0-,892M8P15
N71
1811220

சிவமயம்.

# தஞ்சைசற்குண சதாரம் சரித்திரம்.

காவடிச்சிந்து திருப்புகழ்வர்ணமெட்டுகளடங்கியுள்ளது.



விரகாலூர் வித்துவான்

சுப்பையாபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை [illegible] அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

விலை) 1921. (அணா 3.

O-,892m SP,T
N21
184220

ஸ்ரீராமஜயம்.

# நூதன புஸ்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம், வா. கிருஷ்ணசாமிகோனர் இயற்-

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமகாபாரதம். ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு. 40-சயிட்டென்னது | 0 | 4 | 0 |
| ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ளபுஸ்தகம் | 0 | 4 | 0 |
| ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| இராமாயணத்திருபுகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| நற்குலசேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் அதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 | 2 | 0 |
| ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம் | 0 | 2 | 0 |
| அல்லி அர்ஜுனா திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு, இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 | 2 | 0 |
| மேற்படி அல்லி அர்ஜுனா இரண்டாம்பாகம் | 0 | 2 | 0 |
| கோவிலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள படல்களை உபயோகிக்குமாறு பல வர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 | 2 | 0 |
| மேற்படி இரண்டாம்பாகம் | 0 | 2 | 0 |
| வல்லாள மகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து | 0-2-0 | | |

## திருசிரபுரம், கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீராமாபண பக்திரஸக் கீர்த்தனைகள் நூதன இந்தல்தான், பாரிஸ், தில்லானா, டோமரி அடங்கியது | 0 | 5 | 0 |

கும்பகோணம் புஸ்தகஷாப்பு கே. ஸி கதிர்வேல்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| நந்தனார் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| சாவித்திரி-சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-ம் பாகம் | 0 | 2 | 0 |
| மேற்படி சாவித்திரி-சத்தியவான் 2-ம் பாகம் | 0 | 2 | 0 |
| மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 3 | 0 |
| வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை | 0 | 1 | 0 |
| நாம காம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு இதிலுள்ள கீர்த்தனைகள் வேறு நூதனமானதாகும் | 0 | 3 | 0 |
| மாம்பழக்கும்மி | 0 | 1 | 0 |
| பிரகலாத சரித்திரடிராமா | 0 | 3 | 0 |
| ஸ்ரீசென்னராஜப பெருமாள் பேரில் பக்திரஸ தருள்வாக்கு பதங்கள் | | 4 | 0 |
| ஸ்ரீ[illegible]பிரான் பஜனைகீர்த்தனை | 0 | 3 | 0 |

சிவமயம்.

பலநூதன இந்துஸ்தான் பார்சி

தஞ்சை சற்குண

# சதாரம் சரித்திரம்.

இஃது,

தஞ்சை சைவ ஞான சங்கீத சபா

வித்துவான் விரகாலூர்

சுப்பையா பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

தஞ்சை புட்பவீதி

T. S. வெங்கடாசலம்பிள்ளை யவர்கள்

விருப்பத்தின்படி,

சென்னை:

பெ. ஆறுமுக முதலியாரால்

முராஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

இதன் விலை)		1921.		(அணா 3

184228

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில். "பார்சி. தஞ்சை சற்குணசதாரம் சரித்திரத்தை" வித்துவான் விரகாலூர் சுப்பையாபிள்ளை அவர்களால் எழுதினதை பெ. ஆறுமுகமுதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்ட படியால், இதை என் அநுமதி யில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்தி லாகிலும் அச்சிட லாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட் டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

சிவமயம்.

# விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாரருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஷ்டு பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோறிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் தாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பில்லைகள் அனுப்பினால் தாங்கள் கட்டெபெட் போஷ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

வேண்டியவர்கள் உங்கள் விலாசத்தை விவரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

4-வது கெம்பர் 2-வதுசந்து, பெருமாள் கோவில் தோட்டம் மதராஸ்.

உ

சிவமயம்.

விரகாலூர்

சுப்பையா பிள்ளையவர்களா லியற்றிய

# தஞ்சை சற்குண சதாரம் சரித்திரம்.

விநாயகர் துதி, வெண்பா.

ஐங்கரனே ஞான வரிமா மருமகனே
சங்கரனீன்ற தனயனே—பங்கமறு
மாது சதார மணியின் கதையோத
ஆதரவாய் வந்தருள்.

---

துதி - தரு.

என்ன கேள்விமுறை என்ற வர்னமெட்டே. பின்முதே.

பல்லவி.

ஆகுவாகனே
அத்திமுகத் துத்தமனே
சத்தியருள் புத்திரனே — ஆகு

அநுபல்லவி.

ஏகா சுந்தர வாகா மந்தர யோகா வந்தருள் — ஆகு

சரணங்கள்.

வல்லபை மகிழப் புல்லுமணனே
நல்லவரெவருஞ் சொல்லு குணனே
மனமிக வாடினே னாடினேன்
தினமுனைப் பாடினேன் கூடினேன்

வாராய் என்முகம்
பாராய் யுன்பதங்
தாராய் சீராக ஆறு

2. மதத்தை யடுத்துக் கதத்தைத் தொடுத்து
இதத்தை யுடுத்த விதத்தை விடுத்து
மதிதடு மாறினே னாளுமே
தவித்து கோறினே னாளுமே
மைந்தன் சுப்பையன்
சந்தம் ஒப்பிய
தொந்தி யப்பனே. ஆறு

---

## கலைமகள் துதி தரு.

அவனியில் யாரேனும் என்ற மெட்டு.

1. சகலகலாவல்லி சதுமுகன்றேவி மெல்லி
பகரும் கல்யாணகுண பதுமாசனத்தி சொல்லி சகல
2. வெள்ளைக் கலையுடுத்த வேதபுத்தக பாணி
உள்ளக்கலையா மதி யுதவுஞ் சத்தியவாணி சகல
3. பத்தன் சுப்பையனிதம் பரவுமம்மணி தாயே
கத்திரீ பித்தனியென் னாவில் வளருவாயே சகல

---

## 1 - வது சீன்.

# சத்தியபுரி

## சாரங்கஸ்தன் தர்பார்.

ஆயநபிவாரிச்சலோ என்றமெட்டு.

1 ஆறுமுக மானவனே ஆளவேணுந் தேசனே
அருமறை புகழ் திருமலைவளர்
குருபரமுரு கேசனே ஆறு
2 வேறுதுணை யாருமில்லை மேருபோ னானவா
விசிதமயில் மிசைவருகிற
விதரணகுண மீனவா ஆறு



3 சுப்பைய னென்னானந்துதி சூலபாணி பாலனே
சுந்தரவீர தீரகோர
சூரனைக்கல் வேலனே. ஆறு

---

## தேச விசாரணை.

ஜப்தகலந்தரு என்றமெட்டு.

இரா. மந்திரி யிந்தநம் மதிதலஞ் செழித்திட
மாதமும் மாரிகள் வருஷிக்குதா
மந். மன்னனே குறைவின்றி மாதமும் மாரிகள்
மாறாது பொழிகின்றதே
இரா. தர்ம சத்திரங்களில் தவறாதுகா தன்ன
தானம் நடக்கிறதா மந்திரி
மந். சந்தத மாயிரம் ஆயிர மதிதிகள்
சாதமுண் டேகுகிறார் வேந்தே
இரா. தேவால யங்களிற்பூஜை செம்மையாய் நடக்குதா
மந். தேவர் கோவிற்பூசைகள சிறக்க நடக்கின்றதே
இரா. சிற்றரசர் கப்பங்கள் செலுத்தி விட்டாரா
மந். கொற்றவர்கள் முற்றிலுங் கொடுத்து விட்டார்க
இரா. சித்த மகிழ்ந்தேன் மெத்தபுகழ்ந்தேன்
தென்மதுரை யம்பிகையை
கும்பிடுவோ மன்புடனே மந்திரி

---

## சாரங்கஸ்த மகாராசன் தன் குமாரனாகிய சுவேதச்சந்திரனை மணஞ்செய்துக் கொள்ளும்படி வேண்டல்.

## சுவேதச்சந்திரன் தர்க்கம்.

தேவாதிதேவா என்றமெட்டு.

சுவேத. தந்தையேயுந்த னற்றாள் பணிந்தேன் இத
தனையனைநீங் கழைத்ததுமேன்

சாரங். மைந்தனே சந்தோஷம் சந்தோஷம்தான் — நன்
மணமுனக்கேசெய வெண்ணினேனே

(வேறு. ஷாஹேறவாலா)

சுவேத. இதற்கோவென்னை வரவழைத்தீர்
இதமறியாத நினைவெடுத்தீர்
எளியேன் மனத்திலது விருப்பம்
இல்லையில்லை யல்லையது
தொல்லைவருஞ் சொல்லைவிடும் — இதற்

(வேறு. தேவாதிதேவா)

சாரங். கண்மணி மைந்தா சுவேதசந்த்ரா — அட
கல்யாணம் வேண்டாமென்றேன் மறுத்தாய்

சுவேத. கல்யாணமோ யெம பாசம்பாசம் — அதைக்
கருத்தில் நினைக்கவே மோசம்மோசம்

(வேறு. அவனியில் யாரேனும்.)

சாரங். இந்தமதியுனக்கு எவருரைத்தாரோ விள்வாய்
நிந்தைமொழி விடுத்து விவாகம் புரிந்துகொள்வாய்

(வேறு. பாசுபதம்போல)

சாரங். குலம்விளங்க வோர்சுதனைக்
கொடுத்துதவிடடா — கதி
கொடுத்துதவிடடா — அட
கொற்றவர்க்கு யுத்தல வெற்றுரையேண்டா — அடா
மற்றுரை வேண்டா — குலம்

(வேறு வெள்ளிமலையொத்த பல)

சுவேத. கல்யாணஞ் செய்துவைக்க முனைந்தீர் — பெற்ற
காளை யெந்தன்மீதுமிகச் சினந்தீர் — மாதர்
காதலினு லேதமுறுந் தீதுவரும் போதமறும்
காணும் ஐய காணும்



தையலர்கள் மையலினால் கெட்ட — பேர்கள்
தாரணியிற் கோடியுண்டு யிட்ட — மிக்கு
தனையன் றனக்குமண வினையைமுடிக்கு மெண்ணந்
தள்ளும் நலம் கொள்ளும்

---

## சுவேதச்சந்திரனை சிறையில் வைத்தல்.

சாரங்கஸ்தன்.

என்பேரைச்சொல்லி என்றமெட்டு.

தந்தையின் வார்த்தை தடுத்துரைத்த பெருஞ்
சண்டாளனே யுனக்கே சண்டாளனே யுனக்கே — சிறைச்
சாலையிருப்பிட மாக்குகின்றேன் நீ
தனையனல வெனக்கே தனையனலவெனக்கே — மிக
சாதனை மேவிட வேதனையாகிச்
சபல மடைந்திடுவாய்
சபலமடைந்திடுவாய் சபலமடைந்திடுவாய் — தந்தை

---

## 2-வது சீன். சிறைச்சாலை.

சுவேதச்சந்திரன் சிறைச்சாலையிலிருந்து புலம்புதல்,

சுனப்யாரி மோஹன் என்றமெட்டு.

மகதேவா வாருமே சேயைக் காருமே —

1 மூவாமூன்று லோகமாளு முதல்வனான லோலனே
முக்கண்மேவு நக்கனேகல் மோனஞான சீலனே — மக

2 மாதொருபால் வைத்தவனே மாமதுரை வாசனே
மாலயனுந் தேடிக்காணு மாதவர்க ளேசனே — மக

3 தந்தையென்னைச் சிறையிலிட்டார் சம்மதத்தை யின்றியே
சஞ்சலமே மிஞ்சலானேன் தனையன்மனக் கன்றியே — மக

4 இந்தவேளை வந்துதவு மேனமுமிக வெம்பினேன்
இப்புவியில் கட்டையன்சொல் லேகாவுனை நம்பினேன் — மக

## 3-வது சீன். அரண்மனை.

### சுவேதச்சந்திரன் கனவிற்கண்ட பெண்மணியை விவாகஞ்செய்து வைக்கும்படி தந்தையை வேண்டல்.

மான்குதரியாம் என்றமெட்டு.

எந்தன் தந்தையே சொந்த தந்தையே
என்கனவு தன்னிலொரு
பெண்மணியைக் கண்டேன் ஆ ஹா — எந்தன்
சுந்தரமானவத் தோகை யழகிற்
சிந்தையுமாகினேன் தேடிக்கொணர்ந்து
செல்வமுட னெந்தனுக்கு
நல்லமணஞ் செய்துவைப்பீர் — எந்தன்

---

### அரண்மனைக்கு விருந்துண்ணவந்த சதாரத்தைக் கண்டு சுவேதச்சந்திரன் ஆசையுறல்.

செந்தின்மா நகரந்தனில் மேவிய என்றமெட்டு.

1 மங்களாகர பிங்கித மேவிய
மாதரசாமிவள் — தானே — இவள்
ஆதரமே தறி — யேனே — யிந்த
வஞ்சியின்பது கர்ந்து மீறிய
சஞ்சலங்கடிந் திங்குவாழுவன் — மங்க

2 இந்திராணியு மேனகை யூர்வசி
ரம்பையுங் காணினுன் — ஞணி — பல
கும்பிடு போடுவர் — பேணி — ஆஹா
இந்தமாதிரி சுந்தராங்கியை
எந்த காவினுங் கண்டதேயில்லை — மங்க

---

### அழகு சுவேதச்சந்திரனை பரிகசித்தல்.

மானமதுரையிலே என்றமெட்டு.

1 கல்யாணஞ் செய்துக்கொண்ட — பலன்
கைமேலே கிடைத்துதய்யா — மச்சான்



சல்தியிலென் னுட்டைவிட்டு — தந்தை
தாயுடனே போய்விடுவாய்

2 அக்கா புருஷனென்று — வுன்னை
அருமையாகப் பார்க்கமாட்டேன் — நிறை
முக்காடு போட்டுக்கொண்டு — ராஜ
முட்டாளே ஓடிப்போவாய்

3 மச்சானும் நல்லமச்சான் — மெத்த
மரியாதையுள்ள மச்சான் — இப்போ
பிச்சாண்டி வேடங்கொண்டு — மெத்தப்
பிழைமோசம் போனமச்சான்

4 அத்தானும் நல்ல அத்தான் — எந்தன்
அக்காளும் நல்ல அக்காள் — எல்லாங்
கொத்தோடே தோற்றுவிட்டு — யிப்போ
கூண்டோடே போகலுற்றூர்:

---

### தாய்தந்தையர்களுக்கு சுவேதசந்திரன் தேறுத லுரைத்தல்.

மோகனசரசிமானே என்றமெட்டு.

சுவேத. தந்தையரே போய்வருவேன் சஞ்சலப்படாதிருங்கள் சத்திரத்திலிருப்பிரே

சாரங். புத்திரனே துணையாரு

சுவேத. தாயாருட னிங்களிங்கு தங்கியிவி ரன்புடனே — த

சாரங். மைந்தனே வுனைப்பிரிந்தும் மானிலத்திதல் வாழிருப்போம்

சாரங். வாதைப்பட லனந்தானேன்

சாரங். ஏதுக்கினி யுயிர்வாழேன்

சுவேத. மயங்குவதேன் தியங்குவதேன் வந்திடுவேன் சீக்கிரமே

## சதாரமும் சுவேதச்சந்திரனும் வருத்தமுறல்.

எப்புடுகேருபா சுவுகுணு என்றமெட்டு.

எப்படி மனந்துணிந்தீர்
எந்தனை விடுத்துப்போக — எப்படி

1 கைப்பிடித்த காதலரே
கருமிச் சண்டாளி நானோ
ஒப்பியிங் குமைப்பிரிந்து
வுயிரோ டிருப்பேனோ — எப்படி

சுவேதச்சந்திரன்.

கண்மணியே என்பிரிய
காதலியடி சதாரம் — கண்மணி
கன்னியமுட னிருந்தேன்
காவல னுனையணைந்தேன்
பண்ணிய தவக்குறைவோ
பாரிற்பிரிய விருந்தேன் — கண்மணி

சதாரம்.

மன்னவரே யென்துரையே
மங்கையும் வருவேன் பின்னால் — மன்ன
சின்னவ டான யெந்தன்
தீவினையிதுவோ பேணும்
என்னைக்கூட்டிச் செல்லவேணும்
என்குறை தவிர்க்கவேணும் — மன்ன

சுவேதச்சந்திரன்.

என்பிறகே வந்தாயானால்
ஏகவா ருலகிலுள்ளோர் — என்பி
அன்பினுக் கிசைந்த யெந்தன்
ஆருயிர்ச் சதாரமே கேள்
துன்பமற நாட்டினிலே
சுகமோடிருந்து நீவாழ் — என்பி



சதாரம்.

மங்கையருக்கெல்லாம் கொண்ட
மணாளனே தெய்வமாகும் — மங்
இக்குமைப் பிரிந்துவாழ
எப்படி மனஞ்சகிப்பேன்
சங்கடப்படாமலென்னைத்
தாமழைத்துச் செல்வீ ரொப்பேன் — எப்படி

## 4 - வது சீன்.

## ஆ ர ணி ய ம்.

### சுவேதச்சந்திரன் வருந்தல்.

மலடிவயற்று மகன்போலே என்றமெட்டு. தர்க்கம்.

சுவேதச்சந்திரன்.

வனத்தி னடக்கவிதி யாச்சே உன
தனத்தை விடுக்கமதி யாச்சே தின
பனத்தி விடுக்கனது வாச்சே யிது மிகவேச்சே

சதாரம்.

மனது கரைந்து மயங்காதீர் மதி
நினைவு மறந்து தியங்காதீர் மிக
வருத்த மடைந்து புலம்பாதீர் நிலை கலங்காதீர்

சுவேதச்சந்திரன்.

நாட்டை யிழந்தேன் கொடியேனே கடு
காட்டை யடைந்தேன் மிடியேனே மிக
நாசமடைந்தேன் அடியேனே யருள் புரிவோனே

சதாரம்.

தமியி னெழுத்துப் படிதானே நில
வுலகினடக்கு மதிலேனே மனச்
சபலமடைந்தில் கழலேனே கல மலவோனே

## சுவேதச்சந்திரன் தாகவிடா யடைதல்.

மஞ்சுநிகர் குந்தள என்றமெட்டு.

1. சற்குணவதியே சதாரம் பிரியசகி அரியபசி
தாகமுமே லாகுதின்னேரம் பசி
தாகமாகிய சோகவாதனை
போகவேசல மீகுவாயடி சற்குண

2 கண்ணிரண்டு காதடைக்குதே துடிதுடிக்க பதைபதைக்க
காதலியென் மார்படைக்குதே என்ன
காலமோசனி கோலமோ வனு
கூலமோவினை தூலமோயிது சற்குண

---

## தாகவிடாயால் மூர்ச்சித்துவீழ்ந்த சுவேதச்சந்திரனை சதாரம் மடியில்தூக்கி வைத்துப் புலம்புதல்.

கானகத்தில் நாமலைந்து என்றமெட்டு.

1 தாகவிடாயால் மெலிந்து தாபமடைந்திரோ மன்னு
தோகையா ளிங்கென்னசெய்வேன் சுத்தசலமெங்குகாண்பேன்

2 நாடிழந்து நகரிழந்து நல்லசுகந்தானிழந்து
காடுவந்திப்பாடுபட கர்த்தனேவுஞ் சோதனையோ

3 பாவியென்று விந்தகதி பத்தாவே யடைந்திட்டீரோ
மேவிசலந் தேடிவந்து வேந்தரே கொடுத்திடுவேன்

---

## மூர்ச்சை தெளிந்த சுவேதச்சந்திரன் எவ்விதம் ஜீவிப்போமென வருந்தல்.

தோட்டு தாலி கட்டிய என்றமெட்டு, தர்க்கம்.

சுவேதச்சந்திரன்.

நான் என்னசெய்வேனடி மாதே இனி
ஏது செய்வேனடி கோதே இந்த
மன்னன்பிழைக்கவழி யாதே மனம்
வருந்துதேனே புவி மீதே



வகையெனக் கிப்போதே
வருத்துதரை தப்பாதே பசி
வாதை பொறுக்கமுடி யாதே நான் என்

சதாரம்.

என்னை மணந்தமண வாளா எழிற்
திசைந்து விளங்குமணித் தோளா நீர்
சின்னமடைகுவ தேன் வாளா நான்
செப்பு மொழியதனைக் கேளாய்
தேவியுமோர் பட்டுச்
சேலைதாரேன் விற்று வந்து
சேர்வீ ராயிரம்பொன் பெற்று என்னை

---

## சுவேதச்சந்திரன் பட்டுவிற்கச் செல்லும்போது தர்க்கம்.

வன்னத்தினைமாவை என்றமெட்டு.

பட்டைவிலைகூறச் செல்குவேன் இந்த
பட்டணத்தோரிடம் நல்குவேன் வந்து
பாவையே சிக்கிரம் புல்குவேன் மெத்தப்
பசியாலுடல் மெலிவாகுது
நிசியாகுமுன் னினிதாகிட பட்டை

சதாரம்.

சென்றுவருவீரென் மன்னனே அதி
சீக்கிரமாகவென் முன்னமே இங்கு
சிரழிந்தோமின்றி யன்னமே யீசன்
செடலாமதை யெவராலறிந்
திடலாகுமிக் கணமேநகர் சென்று

சுவேதச்சந்திரன்.

தந்தையுடன் தாயை நீங்கினேன் வந்த
தாழ்மையினால் வன மோங்கினேன் பசி
தாகத்தினாலலைந் தேங்கினேன் வுனை

தனியேவிடுத் தனமேசெல
மனம் வாடுது வுயிர்சோருது பட்டை

சதாரம்.

என்னைக் கலியாணம் பண்ணவும் உமக்
கிந்தவிதி வந்து கண்ணவும் மனத்
தென்னுதெல்லா மின்றிங் கென்னவும் அந்த
இன்றையோன் விதித் தனுமிதை
யெனிலாகுவ திலகாரியம் சென்று

சுவேதச்சந்திரன்.

கன்னிகையா ளேச தாரமே உயிர்க்
கண்மணிமாதேவி - சாரமே கொண்டு
கண்கலங் காதேயின் னேரமே நான்
கடிதேகிவந் திடுவேனிட
மிதைநீவிடுத் தகலாதிரு பட்டை

சதாரம்.

துட்டவிலங்கு வாழ் காட்டிலே காருந்
சேர்ந்து தவித்தழ காட்டிலே மிதை
கப்பம்பயதாசனும் பாட்டிலே சொலத்
துணைவாயிரிக் கிடகீர்தலை
விதியோயெவர் சதியோயிது சென்று

இதுவுமது தர்க்கம்.

பஜாயுமே தில்மே என்ற மெட்டு.

சதாரம்.

மணாள மிந்தக்கதி வாச்சதே வும்மை
மாது பிரிந்திட லாச்சதே மணாள

சுவேதச்சந்திரன்.

தனியாயிருந்து நீ வாடாதே மனமா
சஞ்சலத்தா லென்னைத் தேடாதே தனியா



சதாரம்.

பத்தாவே சீக்கிரம் போய்வாரும் இந்த
பாவிக்கொரு முத்தமே தாரும் மணாளா

சுவேதச்சந்திரன்.

கவலைப்பட வேண்டாம் கண்மணி உயிர்க்
காதற்கிளியேயென் பெண்மணி தனியா

---

5-வது சீன் இராஜவீதி.

சுவேதச்சந்திரன் குட்டை விற்றல்.

போதலா மேனது நாதா என்றவர்னமெட்டு.

1. பட்டுவிற்கப் போறேனுனே பாராண்ட மன்னன்தானே
இட்டதே விதியெனக்கு யீசனேவுன் சோதனையோ பட்டு
2 கட்டழகி யென்மனைவி காட்டினிற் றனித்திருக
பட்டுவிற்க வந்தேனிங்கு பட்டணத்து வாசிகளே
3 சித்திரப் பட்டாடையிது செல்வத்திலுயர்ந்தவரே
இத்ததி யிங்காயிரம்பொன் னீந்திதனைக் கொள்ளுவீரே
4. இந்நகர் முற்றுமலைந்தேன் யேனென்பார் காணேனையோ
மன்னவனாரண்மனைக்கே மகிழ்ச்சியுடன் கொண்டுபோறேன்

---

6-வது சீன் மயோன் தர்பார்.

திரிச்சினச்சாரியாம் என்றமெட்டு.

1 மதிதலம் போற்றிடு மாராஜ கேசரிநான்
உல்லாச மாராஜ கேசரிநான்
சிங்கார மாராஜ கேசரிநான்
சபை வந்தேனே
சபை வந்தேனே
சபை வந்தேனே
மன்னவர் சிமோனே கோடி
வந்தன மெல்லோர்க்குந் தந்தேனே மதிதல

2 பரமனே வுன்திருப் பாதாரவிந்தமேதா
மன்றாடும் பாதாரவிந்தமேதா
கொண்டாடும் பாதாரவிந்தமேதா
பதம் பாடினேன்
நிதம் தேடினேன்
இதம் கூடினேன்
பத்தனுமானேன் முகம்
பார்த்தருள்செய்வாய் கொங்தேவே — மகுடவ

---

## தேசவிசாரணை.

வேலவாயேனை யாளாயி என்றமெட்டு.

பல்லவி.

மயோன் — மாதமும்மாரி மாறுமற் பெய்யுதா
பெய்யுதா மந்திரி பெய்யுதா மந்திரி

சரணங்கள்.

மந்திரி — மாதமும்மாரி மகிழ்வுடன் துறி
மாநகரஞ்செழித்து மாட்சியாயுள
மன்னனே மனமகிழ்வீர் — மாத
மயோன் — வேதியர் வேத மோதுகின்றாரா
மந்திரி — வேதியர் தினந்தோறும் வேதமோதுகிறார்
வேந்தனே யுணர்ந்திடுவீர் — மாத
மயோன் — எந்தன் மந்த்ரி யானதந்திரி
யாதும் விசேஷங்க ளிருக்குதாவேறு
மந்திரி — எந்தையே வுரைப்பேனிதோ — மாத

---

## மயோன் குட்டையை வர்ணித்தல்.

ஷாகே வாலா என்றமெட்டு.

1 ஆஹா யிந்த குட்டையைப்போல்
அவனியிலே நான் கண்டதில்லை
ஓ ஹோ யிதனை செய்த தெந்த
உத்தமனோ உத்தமியோ
மெத்தவும் விசித்திரமே



2 இப்பட்டாடை செய்ததுமோர்
எந்திழையாமெனை வென்றுகிறேன்
என்மந்த்ரி சொல்தந்திரி
என்னனிலே கேட்டிடுவாய்
சொன்னனிலே கிட்டிடுவாய் — ஆஹா

---

## சுவேதச்சந்திரன் மயோனிடத்தில் தன் வரலாறு கூறுதல்.

வெள்ளிமலையொத்த என்றவர்னமெட்டு.

1 சத்தியபுரித்தலமென் ஊறு நல்ல
சந்திரசு வேதனெந்தன் பேறு யிந்த
தாரணியிலே மனைவி போது சதாரமென
நீரே அறிவீரே

2 நாசமுறக் காலம்வர லாச்சு திரு
காடுவிட்டுக் காடுமைய லாச்சு கொண்ட
நங்கைதனை சங்கையுற தங்கவிடுத் திங்ஙனமுற்
றேனே கொடி பேனே

3 என்மனைவி செய்ததிரு வாகும் இதற்
கேற்றவிலை யாயிரம்பொன்னாகும் இனி
இந்தவிலை தந்திதனை சிந்தையுற வந்துகொளு
வீரே மன்னனீரே.

---

## தாசி வருகை.

இந்துஸ்தான்.

அபுதமுலே தேக்கோ ஸமான
ஸமான ஸமான — அபுத

1 நைனசருஜானு பஜனகருஜானு
அபுதமுலே தேக்கோ ஸமான ஸ ஸ — அபுத

2 கோமளைகளிலே கூந்தோபேஸி
அமுதமூலே தேக்கே ளமான ணை ளை அமுத

---

## தாசி மயோனைப்பணிதல்.

ஷாகோ பிலாதே என்றமெட்டு.

பாதமலர் பணிந்தேன் அரசே
பாதமலர் பணிந்தேன் பாத

1 ஆதரவுடனே அண்ணலே யென்னை
அழைத்த விபரஞ் சொல்வீர் ஹா ஹா பாத

---

## மயோன் சதாரத்தை அழைத்துவரும்படி தாசிக்கு உத்திரவிடல்.

தக்கபாராங்கல்லே என்றமெட்டு.

1 சுந்தரமாகிய தாசி எந்தன்
சொற்படியே செயி லாசி பெற
அந்தமுள்ள மக ராசி நீ
ஆகுலையே யிதை யோசி

2 நமது நகர்ப்புறந் தாவி யுள்ள
நந்தவனத்திலோர் காவி விழி
குமரியிருக்கிறாள் மேவி மையல்
கொண்டேனவளிடம் பாவி

3 மங்கையைக்கண்டுநற் சேதி நய
வஞ்சக வார்த்தைக ளோதி கூட்டி
இங்குநீ வந்திடிற் பாதி நாடு
மீகுவேனின்றுநான் போதி

---



## 7-வது சீன்.

## நகரையடுத்த உத்தியான வனம்.

## சதாரம் நாயகனை நினைந்து வருந்தல்.

ஹாயே நாதா பீரஸ் காந்தே என்றமெட்டு.

1 என்பிராண நாதனின்னு மேனோவரக் காணிலேன்
துன்பமென்ன நேர்ந்ததுவோ தோகையேதுந் தோணிலேன்

2 பார்த்தகண்ணும் பூத்ததிந்த பாவிநெஞ்சு மேங்குதே
வேர்த்துவுடல் சோருதே மென்மேலுந் துக்கமோங்குதே

3 ஏழைசோகங் காணச்சகியாதிறந்து பட்டாரோ
பிழைபெரி துள்ளாளென பேதையைக் கைவிட்டாரோ என்

4 இன்னிலையிம் கன்னிகையா னேங்கலாமோ யீசனே
மன்னன்வரக் கிருபைசெய்வாய் வஞ்சமேன் கைலாசனே என்

---

## தாசி சதாரத்தைக் கண்டு வினவுதல்.

அய்யா ஆரய்யா என்றமெட்டு.

தாசி. அம்மா ஆரம்மா நீயே
சதாரம். அடியாளோர் பெண்பாவியே
தாசி. இங்கு நீ வந்த தேனோ
சதாரம். என்தலை விதிவசமே
தாசி. அழுவதேனோ வம்மணி
சதாரம். ஆளன் வாராதினால்
தாசி. நாயக னெங்கு போனார்
சதாரம். பட்டு விற்கச் சென்றனர்
தாசி. நானறிவே னவரை
சதாரம். என் நாதனை நீ கண்டதுண்டோ
சொல் சொல் சொல் சொல்

---

### தாசி யுரைத்தல்.

அப்பா மகனே அலறி துடித்திட என்றமெட்டு.

1 ஆசைமகளேவுன் னேசக்கணவனும்
மோசம்போனதையே சொல்லவந்தையே மெத்தவதையே
ஆறுமா மனந்தேறுமா மனந் தேறுமா தே தே — ஆசை

2 பட்டதை விற்றிட பட்டணமே வந்த
பத்தாவவர்தானே கணவானே சொல்லுவானே
பாபமே பரி தாபமே பரி தாபமே தா தா — ஆசை

3 வாலவயதிலுன் தாலியிழந்திட
காலம்வராச்சே கனம்போச்சே வசையாச்சே
கர்மமோ யிது தர்மமோ யிது சர்ப்போ தர் தர் — ஆசை

4 யானைமிதித்திட லானதவர்கதி
அதனையுன்பாற் சொல்ல வந்தேன் மெள்ள துயர்கொள்ள
ஐயையோவாழ்வு பொய்யய்யோ வாழ்வு பொ பொ பொ — ஆசை

———

### சுவேதச்சந்திரனை யானை மிதித்துவிட்டதென தாசி யுரைக்கவும் சதாரம் புலப்புதல்.

கபுறுலேனுவே என்றமெட்டு.

மண வாளாயென்னை வாட விடுத்துநீர்
மடிந்தீரோ பாவி வாழ்வேனோ பூவில்
நான்பாவி வாழ்வேனோ பூவில் — மண

1 ஆளுந் தேசம் வாழு மாடம்
யாவுந் துறந்து வந்தீரே
யானைமிதிக்க லானதேயிங்
காருந்துயரந் தந்தீரே — மண

2 தந்தை தாயை மறந்து பாவி
தம்மைச் சதமென் றிருந்தேனே
இந்தவிதிக்கோ யிங்குவந்தீர்
எந்தலே குண சாந்தரே — மண



3 மஞ்சளிழந்தேன் மாலையிழந்தேன்
மாங்கலியந் தானிழந்தேன்
அஞ்சிடாதே யென்றுயென்னை
ஆற்ப்பா ராரினியே — மண

———

## 8-வது சீன்.

### அரண்மனை அந்தப்புரம்.

### தாசி சதாரத்தை அழைத்துவந்து அரண்மனையில் விட்டுச் செல்ல மயோன்கண்டு ஆசையுறுதல்.

ஓரடிப்பதம்.

நானிலத்தாசை துறந்தேன் என்றமெட்டு.

பல்லவி.

மாதுசிரோன்மணி வருவாய் உல்லாசமாக
மங்கையேயோர் முத்தந்தருவாய் — மாது

அநுபல்லவி.

வாது விடுத்தினிய வசனமுரைப்பாயந்த
மாரன் பாவியா லெந்தன் மானமழிந்து நொந்த

வாதனை யானேன் மயிலே குயிலே நல்ல
போதனை நானே புகல்வேன் மகிழ்வேன் இனுந்
சாதனை யேனோ தகுமோ சுகமோ இது
சோதனை தானே சுபசோ பணமா யினி

வஞ்சமருவு நெஞ்ச மொருவு
தஞ்சமுனது கஞ்ச பதமே.

வட்டமிட்டுப கட்டு மொட்டுமி
ரட்டு கட்டுகு வட்டு சுட்டுத
னத்தை தொட்டுபி டித்து வொட்டவ
ணைத்து கட்டுப முத்தமிட்டிடற்

புளக மெய்துஞ் சம்பந்தங் கண்
டளவி லின்ப மிங்கென்று முண்

டிருந்து வாழ வெண்ணுகின்றனன்
திருந்து தாழ கண்ணுகின்றனன்

சீக்கிரஞ் சுக பாக்கியந் தர
யோக்கியஞ்சுசி லாக்கியம்பெற

தினையளவுமுன துளமிளகியொரு
தாமெனை மருவ நினையவு மெனசங்

தேகமே விடாததான சம்
போகமே புரியநீடு முற்
சாகமே மிஞ்சுது லாகிரி
மோகமே சிநேகமே கொரு

தெய்வ லோகமி ருந்திலங்கிய
வையமீதினில் வந்திரங்கிய

திருவை யொப்பிடு மரிவையற்புத
விரகை சுப்பையன் றருவுரைப்படி

சரலாம் பொருத்தசாதகம் இணங்காயாகிற்
சருமே யுனக்கு பாதகம் மாது

---

## சதாரம் தான் மோசம்போனதை யறிந்து வருந்தல்.

ஆஹா எஹியாதுபார் என்றமெட்டு.

பல்லவி.

ஈசா என்ன செய்வேன்
இந்தவிதி வந்ததேகா னெவ்வா றுய்வேன்
பாசாங்குக் காரியோர்
பாவிபழி காரியென்னை மோசஞ்செய்தாள் ஈசா

சரணம்.

தேசமிழந்து பொருளுஞ்சில மிழந்துமிருந்த
காச வனவாசம்வந்து காயகனையுமிழந்து



காடியே பிரலாபித்து
வாடியே புலம்பும்போது
தேடியே விளைந்ததீது ஈசா

பல்லவி.

ஓஹோ மன்னனே கேள்
உத்தமருக் கொத்ததல வித்தொழிலே
ஆகா தாகாதிது
அம்புவியிற் பெண்பழியும் போகாதது ஓஹோ

சரணம்.

ஏகசக்க ராதிபதி யாகவுல காளுவென்றீர்
தாசையர்கள் மோகந்தனில் சுற்றித்தடுமாறி நின்றீர்
தொல்லையா வுமக்குமதி
யில்லையா யெனைவிடுத்து
செல்லையா கடந்தப்புறம் ஓஹோ

---

## மயோனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

பஹாரியாலா என்றமெட்டு.

பல்லவி.

சலாபமாதே மோகந்
தானே னிப்போதே சலாப

சரணம்.

உலாசசுக சுந்தரி வுதாரகுண தந்தரி
யோசியாது பேசுவது முதவாதே மோகந்
தானே னிப்போதே சலாப

சதாரம் பல்லவி.

தகாது வாது செய்யச்
சாருமே தீது தகாது

சரணங்கள்

மகானுபாவனே யெளிய மங்கையானு மாகுமே
மாதுபழிகொண்டு வீணில் மடியாது வாழு
வாயே யிப்போது தகா

மயோன். பாவிமாரன் வாதையா லென்னுயிர் சோருதே
சதாரம். தேவியிட மேவினானுன் நாவடங்கிருமே
மயோன். பூவிலுன்னைப்போலே வேறுபூவை காணேனே
சதாரம். கூவிக்கூவித்தாவி வீணிற் குலைக்காதே
மயோன். என்னை கோபிக்காதே தகாது

---

## சதாரம் மயோனுக்கு நீதியுரைத்தல்.

நல்வாக்கு நீ கொடடி என்றமெட்டு.

1 மன்னவா யிதுதர்மமா ஐயோ
மங்கையா லென்மேல் வர்மமா பாவி
முன்னஞ்செய்த கர்மமா வந்து
மூண்டிதென்க்கே மர்மமா என்னசெய்வேன் மன்

2 மங்கையர்க ளாசையினால் ஐயா
மாண்டவர்கள் கோடாகோடி என்னை
தங்கையென வெண்ணுமையா பதந்
தண்டனிட்டே னுனமெய்யா என்ன செய்வேன் மன்

---

## மயோன் தர்க்கம்.

அரே ஷாதுமான் என்றமெட்டு. பின்முடுகு.

பல்லவி.

அடி வஞ்சியே மனம்
வாடிப் புலம்புவதேன் கெஞ்சியே அடி

அநுபல்லவி.

மன்னுதி மன்னனென் றெண்ணும லென்னையே வஞ்

சரணம்.

சதாரம். கெஞ்சி கெஞ்சி மனதைக் கிலேசப்படுத்துவதாற்
கெடுவீர் கெடுவீர் கெடுவீர் கெடுவீர்
மயோன். கேவலப்பட நீயுகாரத்தனே
ஆவலுக்கிட ரே நினைத்தனே வஞ்

---



## சதாரம்.

பல்லவி.

மகாராசனே மதி
ஞானமில்லாத குணநீசனே மக

அநுபல்லவி.

கத்தாதே எத்தாக கத்தாதே பித்தாகி ராசனே

சரணம்.

மயோன். தேசத்தரசியென சிரசில்முடிபுனைவேன்
சிறப்பாய் சிறப்பாய் சிறப்பாய் சி
சதாரம். தேசம் வேண்டேன் சிறப்பும் வேண்டேன்
நேசம் வேண்டேன் நினைத்துப் பேசும் ராசனே
மயோன். என்னசொல்லினு எனக்கிரக்க மென்பது நெஞ்சில்
இல்லையா இல்லையா இல்லையா இல்லையா
சதாரம். எட்டிச்செல்லும் சனம்புல்லும்
மட்டியில்லும் வார்த்தை சொல்லும்
மயோன். கிட்டிவந்தா லெட்டிப்போறாய்
கெட்டிக்காரி விட்டிடேனான்
சதாரம். கெடுநினைவினை விடு விடு விடு
மயோன். சடுதியிற்றனங் கொடு கொடு கொடு ராசனே

## இதுவுமது தர்க்கம்.

மசத்தமன என்ற வர்னமெட்டு.

மயிலே குயிலே மானே தேனே
மதனவிரகந் தீராய் ____
விதன மகலப் பாராய் மயிலே



184220

### கஜல்.

சதாரம். ஒயிலாய்க் கைவீசி விலையோது குலவேசியல்ல
மயோன். அயில்விழியாளே யுன்னையண்டித்தொண்டு செய்குவேனே
சதாரம். அவலகவலை யடைந்து வீணில்
அருமை குலைந்திடாதே
பெருமை கலைந்திடாதே — மயிலே
மயோன். அஞ்சுக சுந்தரமே ஆகாது வஞ்சகமே
சதாரம். வஞ்சகி நானுமல்ல மன்மோகினி வார்த்தை வேண்டாம்
மயோன். மருவ வருவாய்
சதாரம். அறிவு பெறுவாய்
மயோன். வருமமிதுவே
சதாரம். தருமம் பொதுவே
மயோன். மயங்குறேனே நானே
சதாரம். தியங்கலேன் சீமானே — மயிலே

---

### சதாரம் மயோன் மாளிகையில் தனிமையாயிருந்து புலம்புதல்.

சின்னவயதிலிந்த என்றமெட்டு.

1 மங்கை யெனக்குமிந்த கதியே ஹா
வந்ததுவே யென்ன விதியே
மங்கல்யமணிந்த மணாளனைப் பிரிந்து
வாதைப்படவோ புவி பிறந்தேன் ஹா
வாலைப்பருவமெனச் சிறந்தேன்

2 ஆருமில்லாத பாவி யானேன் ஹா
அஞ்சிறையில் வாழ்வு மானேன்
தீருமென்றயரே தெய்வமே வேறே
தேறுதலான வழி காணேன் ஹா
சிந்தை கலங்குதென்றன் தோணேன்



3 தாலி கழுத்திலுற்ற காளாய் ஹா
சந்தோஷமென்பதற்றேன் வாளாய்
கேலிக்கிடமாச்சுதே கீர்த்தியும் போச்சுதே
கிருபைபுரிந்து காரு மீசா ஹா
கீரற்கிரங்கு முப தேசா — மங்கை

---

### 9-வது சீன்.

### நந்தன வனம்.

### காராக்கிரகம் விட்டுவந்த சுவேதச்சந்திரன் வனத்தில் சதாரத்தைக் காணாது புலப்புதல்.

நைநோஜமாரா என்றமெட்டு.

1 கானகத்திலிருந்த கண்மணியா மெனது
காதலி சதாரத்தைக் காணேனே நான்
காணேனே நான்
காதகனாகினேனே — கான

2 மானே சதாரமே மதன கடாரமே
வனத்தில் மறைந்தனையோ வாராய் நேராய்
வாராய் நேராய்
வந்துவோர் முத்தந்தாராய் — கான

3 எந்தனைக் காணும் விருப்பிடத் தோணாமல்
எங்குபோ யிறந்தாயோ எங்கி நீங்கி
எங்கி நீங்கி
என்பிராண நாயகி

4 வனத்து மிருகங்கள் வதைத்துனைத் தின்றதோ
மாபாவி யென்செய்வேன் மானே தேனே
மானே தேனே
மயங்குகிறேனே — கான

5 எங்கிலுங் காணேனே யாதொன்றுந் தோணேனே
எனை யெந்தனைக்காரு மீசா யீசா
யீசா யீசா
என் மனையாளைக் காட்டும் — கான

---

## இதுவுமது புலம்பல்.

நடந்ததென்னசொல் என்றமெட்டு.

என்ன என் பரிதாபம் ஐயோ
எவர்களால் சேர்ந்ததோ யிக்கொடுஞ் சாபம் என்ன

1 அன்னைதந்தையரை விட்டோன் பிரிந்து
அறுதியா யிங்கு வந்தேன் ஐயோ
உன்னையுமிழக்க வூழ்வினைப்பயனோ
ஒலமிடலாச்சே சதாரம்
ஒலமிடலாச்சே என்ன

---

## 10-வது சீன்

## இ ரா ஜ வீ தி.

சுவேதச்சந்திரன் சதாரத்தை தேடிக்கொண்டு வருதல் புலம்பல்.

ஹாயே சையா என்றமெட்டு.

ஏனோ என்னைப் படைத்தாய் ஜெகதீசா எம்
மானே சுந்தரேசா ஏனோ

1 கானே கொடியபாவி யானேன் உனை
தானேர்ந்திடாத பேய னானேன் மெஞ்
ஞானமேது மில்லேன் பாழ்
ஈனமேவும் பொல்லேன்
கலமறியேன் பலமறியேன் புலமறியேன் அலநெறியேன் ஏனோ

2 வானோர் பரவு மலர்த்தாளா மழு
மானேர்கரம் பெறு கங்காளா
மங்கையுமானோர் பாகா உத்
துங்கஞானத் தேகா
வந்தனருள் தந்திடுவாய் சிந்தைதனி லுந்திடுவாய்



3 மாதே சதார மெங்குபோனாய் மண்
மாதே விசார மிஞ்சலானாய் இம்
மன்னன் பாவி வாடி போடி
யுன்னைத் தேடித்தேடி
மயங்குகிறேன் தியங்குகிறேன் தயங்குகிறே னுயங்குகிறேன் ஏ

---

## வீதியில் புலம்பிக்கொண்டு சென்ற சுவேதச்சந்திரனை மாடிமேலிருந்த சதாரங் கண்டு கூறுதல்.

பெண்ணே என்னை ஏனோ எழு என்றமெட்டு.

சதாரம். வாரும் மன்னா கானே மயங்கலானேன்
சுவேத. மாபாவி வாடியுனைக்காணா
தோடியுலகெங்குந் தேடி நொந்தேன்
சதாரம். காதனே தலைவிதியிதே
சுவேத. அருமை சதாரம்
சதாரம். ஆசை மணாளா
சுவேத. மாதே இந்தவிதி யுனக்கும் வந்ததேன்
சதாரம். பின் சொல்வேன் மன்னா

### க ஜ ல்.

சதாரம். ஆ ஆ என்பிராணேசா அடியாளிப்போதே
ஆயிரம் விராகன் அளிப்பேன் தப்பாதே
ஆடையுங் குதிரையும் வாங்கிக்கொண்டே
அணுகுவீர் சாமம் வருகுவேன் பேதே

### க ஜ ல்.

சுவேத. மாதே காணுந்தனை மகிழ்வுடன் கண்டேன்
மட்டடங்காதவா னந்தமுங் கொண்டேன்
தேனே வுன்றன்மொழி திருவமுதுண்டேன்
செப்பிய மொழிப்படி செய்குவேன் விண்டேன் மன்

## 11-வது சீன்.

### நகரை யடுத்த சோலை

### திருடன் பிராப்தம்.

தெம்மாங்கு.

1 மலைக்கோட்டைக் கள்ளனடா மாயாண்டி பேரனடா
நிலக்கோட்டை போய்திருடி நிமைப்பொழுதில் வந்தேனடா
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமற் போவே னெடுந்தூரம்

2 செங்கமாசாரி வீட்டில் தோட்டைபோட்டு முத்திரியே
மங்கம்மா சாலைவழி வந்துவிட்டேன் தந்திரமாய்
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமல் போவே னெடுந்தூரம்

3 முக்கால்திருடன் முழுத்திருடன் முதலடிக்கு மாத்திருடன்
பக்காத்திருடன் பலேதிருடன் பயப்படாத நான்திருடன்
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமற் போவே னெடுந்தூரம்

4 கள்ளனுக்கும் கள்ளனடா காத்தமுத்துவீரனடா
கொள்ளையடிக்க வந்தேன் கோட்டைமுனி யார்க்குமட
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமல் போவே னெடுந்தூரம்

5 சத்திரத்தைக் கட்டாமலுந் தர்மங்களைச் செய்யாமலு
பத்திரமாய் வைத்தபொருள் பார்த்தடிக்குந் தீரனடா
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமற் போவே னெடுந்தூரம்



6 கயிறுவழியேறி மெத்தைக்கட்டடத்தினு ளுழைவேன்
வயிரெறிய பொருள்பறிப்பேன் வழிமறித்து பிடுங்கிடுவேன்
நித்திரை நேரம் நலநேரம் டைட்டா
நில்லாமற் போவே னெடுந்தூரம்

---

### திருடன் நாலேணியா லிறங்கிவந்த சதாரத்தைக் காணல்.

நல்ல வரன்றனையே என்றமெட்டு.

வந்தவேளையும் நல்லவேளைதான் அந்த
கந்தர் பூசைபலி நாலேதான் வந்

1 சுந்தரமான வொரு தோகையதோ விரங்கி
எந்தனை நோக்கியிங் கெதிரே வருகிறாள் வந்

2 அன்னநடை நடந்து அரண்மனையைக் கடந்து
என்ன வொயிலாய் வாராள் யானே அதிர்ஷ்டசாலி வந்

3 மதுரைவீரசாமி மனதுவைத்தா ரின்று
புதுமையா யடுவெட்டி பூசைபோடுவே னன்று வந்

---

### திருடன் சதாரத்தை வர்ணித்தல்.

கொச்சகம்.

பூரணச் சந்திரனோ புசியாத மாங்கனியோ
ஆரணி தேவதையோ வொருராஜ கன்னிகையோ
வாரணிந்து வந்தாள் மனமயங்கி நிற்கின்றாள்
காரணங்கள் கேட்டே கலியாணம் கலியாணம்.

---

## கள்ளனுக்கும் சதாரத்திற்கும் தர்க்கம்.

அள்ளி அள்ளி குடிக்கும் என்றமெட்டு.

கள்ளன். ஜீவன் துடிதுடித்து தேகம் பதைக்குதடி
சோலாம் சீக்கிரம் வாடி பெண்டாட்டி நீ
சோலாம் சீக்கிரம் வாடி கண்ணாட்டி நீ

சதாரம். சோரனே தூர நில்லடா சண்டாளனே
சோரனே தூர நில்லடா சண்டாளனே

முடுகு.

கள்ளன். சிவத்த பெண்ணே சேரு கண்ணே
அவத்தை பண்ணே அடிப்பேனுன்னை ஜீவ

சதாரம். குட்டிச்சுவரே யட்டு கட்டையில் போரவனே
எட்டி நீநின்று பேசடா நீ யாரடா
எட்டி நீநின்று பேசடா நீ யாரடா

கள்ளன். திட்டினு லட்டியேதடி பெண்டாட்டி நீ
திட்டினு லட்டி யேதடி கண்ணாட்டி நீ

முடுகு.

சதாரம். ஈனப்பயலே இரக்தபயலே
மானங்கெட்ட மழுங்கப்பயலே குட்டி

கள்ளன். மல்லிகைப்பூவே யடிவாச மருக்கொழுந்தே
வாதுநீ செய்வதேதடி பெண்டாட்டி நீ
வாதுநீ செய்வதேதடி கண்ணாட்டி நீ

சதாரம். வேதனை செய்யாதே போடா சண்டாளனே
வேதனை செய்யாதே போடா சண்டாளனே

முடுகு.

கள்ளன். வருமமென்னடி வழக்கு யென்னடி
தருமமல்லடி தயவுபண்ணடி
சதாரம். பெரியமூடா பிதற்றாதேடா
கள்ளன். பிரிய மில்லையோ தெரியவில்லையே.



## 12-வது சீன்.

### ந க ர் ப் பு ற ம்.

நித்திரை தெளிந்த சுவேதச்சந்திரன் சதாரத்தைக் காணாது புலம்பல்.

மன்றுளாடியவா என்ற வர்ணமெட்டு.

என்னமாய மிதே ஈசா
என்னுடைமை யென்குதிரை
யாவும்பறி போயினதே என்ன

1 என்னையறியாமல் நித்திரை யோக்கவும்
ஏகாங்கியாகப் படுத்துநான் தூங்கவும்
மின்னுங் குதிரையைக் காணாம லேங்கவும்
விதியோ யெவர் சதியோ கெடு
மதியோ யிது கதியோவழ என்ன

2 தந்தையுந் தாயுந் தவித்தழ வந்தேனே
தையலே யெந்த னரசுமிழந் தேனே
உந்தனை நம்பி உயிரோ டிருந்தேனே
ஓ ஹோயெனை விட்டுவிட்டு
ஏ கினையோ தட்டுகெட்டு என்ன

3 எந்திழையேவுனை யெங்ஙனந் தேடுவேன்
எப்படியா யுன்னிருப்பிடம் நாடுவேன்
வேந்த னெப்போது விழைந்துனைக் கூடுவேன்
விண்ணிடரைத் தீர்த்தேவா
மண்ணிலெனைக் கார்த்திடவா என்ன

---

## 13-வது சீன்

### கானகம்.

**சதாரம் திருடனை ஏமாற்றிவிட்டு வரும் வழியில் இராஜகுமாரனும் மந்திரி குமாரனும் வழிமறித்து நிற்கக் கண்டு வருந்தல்.**

அவனியில் யாரேனும் என்றமெட்டு.

1 வழிமறித்தே நிற்கிறார் மானிடரிருவர்கள்
இழிதொழி லேதுசெய்ய நினைப்பவரோ தெரியேன்

2 துன்பங்க ளெவ்வொன்றும் தொடருதே யெந்தனை
அன்பர் முறைக்கிரங்கி மாதிசிவனே காராய் வழி

---

**சதாரத்தை ராஜகுமாரனும் மந்திரி குமாரனுஞ் சேரும்படி உரையிடல்.**

அம்மா மதுரைமீனுக்ஷி என்றமெட்டு.

இராஜ குமாரன்.

1 அன்னநடையழகி மானே மிக
அருமையான தேனே கண்டேனே
அரசனுக்கும் கானே
அதிக மய லானேன் அன்ன

சதாரம்.

2 ஆனேனென்று கரைந் தாயே என
தன்ப ரேடா நீயே இனிவா
யடக்கிப்பேசு வாயே
அறிவுகெட்ட காயே ஆனே

மந்திரிகுமாரன்.

3 பின்னற் சடையுடைய மாதே பதம்
பிடித்தே னனிப் போதே என்னேடு
பேசா திருக்கி டாதே
பிரியந் தவ ருதே



சதாரம்.

4 பிரியமானே னென்று பேசி பல
பிதற்று ருயே தோசி பெண்புரவம்
பிடிக்கும் போடா சிசி
பேயனே நீ யோசி பிரிய

ராஜகுமாரன்.

5 வாசமணக்குதுன் மேனி அதி
மதுரமான சீனி கற்கண்டே
மனதிலே நீ தானி
மருவு மெஜ மானி வாச

சதாரம்.

6 மருவுமாது கா னல்ல வென்று
மறுத்து சேதி சொல்ல கேளாமல்
வருகிருயே புல்ல
வழியிதுவே செல்ல மருவு

மந்திரி குமாரன்.

7 மங்கையாளே மனஸ் தாபம் என்ன
மருவ லேச லாபம் என்னேடு
வைக்கலாமோ கோபம்
வருமுனக்கு பாபம் மங்கை

சதாரம்.

8 பாப முனக்குத்தான் சேரும் பெரும்
பழிக்குள்ளாக நேரும கப்பையல
பதத்தைத் தேடி நீரும
படித்துமதி தேரும் பாப

சதாரம் ராஜகுமாரனையும் மந்திரி குமாரனையும் தடாகத்தில் புஷ்பமெடுத்துவர அனுப்புதல்.

போம்போ மிதவுங்கனமா என்றமெட்டு.

அதோ தெரியுங்குளத்தில் மலர்க்கபூவி
லாசை யுற்றதேயுளத்தில் அதோ

முதலில் பறித்துவந்து முசரக் கொடுத்தவர்க்கே
இதமுடன் மாலையிட யிசைகுவே னறிவீரே அதோ

---

## 14-வது சீன்.

மரங்களடர்ந்த காடு.

இராஜகுமாரனையும் மந்திரிகுமாரனையும் ஏமாற்றிவிட்டு சென்று நடுகாட்டி லகப்பட்டுக்கொண்டு புலம்புதல்.

உனக்கேதுவேணுங் கேள்மனமே என்றமெட்டு.

ஐயோ என்னசெய்வே னினியே ரசனே நான்
ஏதுசெய்வேன் றனியே ஐயோ என்ன

1 மன்னன் மகனை மணந்து மொருசுகம்
மாபாவி கண்டிலேனே தேவா
மாபாவி கண்டிலேனே தேவா
இன்னப்படவோநீ யென்னைப் படைத்தனை
சிவனும் விட்டிலேனே ஐயோ

2 என்துரையே யுனைக் கண்டுமெக்கால
மிதயங் களித்திடுவேன் பாவி
இதயங் களித்திடுவேன் நீர்
சென்ற விடமு மறியா தலைகிறேன்
செல்லிடமுந் தெரியேன் ஐயோ



## 15-வது சீன்.

நித்திய கல்யாணி பட்டணம் கோட்டைவாயற்படி.

மடையோன் சதாரத்தை தேடிக்கொண்டு வருதல்.

பாலும்கே நாகராவ் என்றமெட்டு.

மாது சதாரமே
மன்ன னென்னுயிர்க் காதாரமே மாது

1 பாதகி யென்னைவிட்டு பாரிலெங்கு நடந்தாய்
பார்த்திப னுனைத்தேடினேன் உள்ள
கீர்த்தியெல்லாங் கெட நாடினேன் மனப்
பூர்த்தி யில்லாமலே வாடினேன் அடி
பைங்கிளி யுந்தனை கண்டிலே னின்னேரம்
பார்க்க யென்முன்னே வா
பட்சமுடனே யொருமுத்தந் தா மாது

---

கள்ளன் சதாரத்தை தேடிக்கொண்டு வருதல்.

ஆறுமுக வடிவேல என்றமெட்டு.

1 தண்ணீர் கொண்டுவந்து தந்திடுவா யென்ற
தையலே யெங்கு சென்றாய் அடி
தந்திரமாக யேமாற்றிநீ யென்னைத்
தவிக்கவிட்டு நடந்தாய் தண்

2 தேசாதி தேசமுஞ் சுற்றிவந்தே னுன்
திருமுகங் காணிலேனே அடி
தேன்மொழியே யுந்தன் மேனிவ்ன வாவினி
செய்வதுந் தோணிலேனே தண்

## இராஜகுமாரன் தேடி வருதல்.

சுந்தரப்யாரி என்றமெட்டு.

1 எங்குசென்று தேடுவேன் எழிலான பூவையே
எழிலான பூவையே இமையாத பாவையே எங்

2 மாலையிடுவேனென்று மகிழ்வா யுரைத்தாயே
மகிழ்வா யுரைத்தாயே மனதைக்கரைத்தாயே எங்

3 கண்ணே நீசொன்னமலர் கடுகி யெடுத்துவந்தேன்
கடுகியெடுத்து வந்தேன் காணுதலைந்து நொந்தேன் எங்

---

## மந்திரிகுமாரன் தேடி வருதல்.

பத்தி சாதிக்க விடாது என்றமெட்டு.

வேசையரை விரும்பலாகா தய்யா
வெட்டைக் கிரந்திகளும் போகா வேசை

1 ஆசைத்துரையே யென்பாள்
ஆவித்துணையே யென்பாள்
காசைப் பிடுங்கிக்கொண்டு
கைநழுவ விடுவாள் வேசை

2 மானங் கெடுத்திடுவாள்
வாதுக் கடுத்திடுவாள்
ஈனப் படுத்திடுவாள்
ஏங்க விடுத்திடுவாள் வேசை

3 வாக்கு மொருவிதமே
மனது மொருவிதமே
சாக்கு மொருவிதமே
ஜாலம் பலவிதமே வேசை



4 தாயார் வளர்த்தவுடல்
சாறாய் குருகிவிடும்
பேயாய் திரியவரும்
பித்தம் பிடித்துவிடும் வேசை

5 செப்புத் தனங்கொடுத்துன்
செல்வத் தனம்பறிப்பாள்
சுப்பையக் கவிராசன்
சொல்லுக் கடங்குறிப்பாள் வேசை

---

## சுவேதச்சந்திரன் தேடிவருதல்.

அய்யோயென் ஜானகியை என்றமெட்டு.

1 கண்மணி சதாரமே காதலனுன்னை
காணுதலைந்தேனே சதாரம் சதாரம் சதாரம் சதாரம் கண்

2 மண்மிசை யென்னைப்போல் மாபாவி வேறுண்டோ
மாதுனையென்றுகாண்பேன் சதாரம் சதாரம் சதாரம் கண்

3 என்னைநீ மணந்தால் என்ன சுகம்பெற்றாய்
ஏந்திழை யாளேயென் சதாரம் சதாரம் சதாரம் கண்

உன்னாசை யாலேநா னுள்ளசெல்லா மிழந்தே
ஓட்டாண்டி யாகினேனே சதாரம் சதாரம் சதாரம் கண்

---

## 16-வது சின்.

## இராஜ தர்பார்.

## பட்டாபிஷேகம்.

இவ்வாறு புலம்பிக்கொண்டுவந்த ஐவர்களையும் அழைத்துவந்து மயோன்முதல் நால்வருக்கும் தரும சாஸ்திரப்படி தண்டனை விதித்துவிட்டு சதாரம் தன்மணாளன் சுவேதச்சந்திரனுக்கு மகுடஞ்சூட்டிக் களித்திருந்தனள்.

## வாழ்த்து.

ஜோர் தூர தூர என்றமெட்டு.

வாழ்க வாழ்க வாழ்கவேத மாமறைநூல் வாழ்கவே
தாழ்வி லாதிஞால மோங்கித்
தழைத்து செழித்து வாழ்கவே வாழ்

1 காவலர் காவலர் ஞானத் தபோதனர்
நன்மைநீமை யாயுமாந்தர் நாளுஞ் செழித்து வாழ்கவே வாழ்

2 தஞ்சை சைவஞான சங்கீத மாசபை
தன்னிலங்க மானசிலர் தழைத்து செழித்து வாழ்கவே வாழ்

3 சுப்பையப் பாவலன் சொலுந்தமி ழோதியே
தோகைபாகன் பாதம்போற்றி துதிக்கும் புனிதர் வாழ்கவே.

தஞ்சை சற்குண சதாரம் சரித்திரம் முற்றிற்று.

சுபம். சுபம். சுபம்.

குப்பகோணம்-இராமச்சந்திரன் இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| காப்பிக்கும் பழயதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம் | 0 | 1 | 0 |
| பாலியப்பெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபாகம் அடங்கியது | 0 | 1 | 0 |
| பூஜா ராமாயணம் | 0 | 1 | 0 |
| சூர்ப்பனகா பங்கம் டிராமா | 0 | 4 | 0 |
| கிருஷ்ணலீலா டிராமா | 0 | 5 | 0 |
| பாஸ்கர்தாஸ்சிடன் வெள்ளைசாமி தாஸரியற்றிய பத்திரசகீர்த்தனை, 1-ம் பாகம் | 0 | 5 | 0 |
| ,, ,, ,, ,, 2-ம் பாகம் | 0 | 5 | 0 |

சுவாமிமலை S. பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| திரு ஏரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து | 0 | 2 | |
| இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும் | | | 0 |
| இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |

சுவாமிமலை, கு. கு. முத்தையாபிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| பொய்சொல்லா புனிதனெனும் சத்யஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து | 0 | 3 | 0 |

மதுரைவித்வான் கலியாணசுந்தரம்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| மன்மதராஜன் சரித்திர லாவணி எரிந்தகக்ஷி 1-க்கு | 0 | 3 | C |
| பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை | 0 | 3 | 0 |
| எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்திரம் என்னும் சித்திராபுத்திரன் கதை | 0 | 6 | 0 |
| ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்ணமெட்டு பஜனை ஜாவளிகள் முதல்பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| தாடகை சம்மாரம் டிராமா 1-ம் பாகம் | 0 | 2 | 0 |
| சீதா கலியாணம் பரசுராமபங்கம் டிராமா 2-ம் பாகம் | 0 | 2 | 0 |
| வழிநடை உப்புமாவு பாட்டு | 0 | 1 | 0 |
| சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் ஏசல் | 0 | 2 | 0 |
| சம்பந்திக்கு சமையல்செய்யும் அப்பளப்பாட்டு | 0 | 1 | 0 |
| பல ஸ்தலங்கள்பேரில் பாடிய சிவப்புகழ் | 0 | 6 | 0 |
| குசேலமாமுனி சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| ஞானசவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| சரசாங்கி ஜாவளி முதற்பாகம் | 0 | 2 | 0 |
| சூடிகொடுத்த நாச்சியார் என்னும் கோதைகல்யாணம், ஆண்டாள் பரிணயக் கும்மி | 0 | 3 | 0 |
| சிறுத்தொண்ட நாயனர் திவ்யசரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு அடங்கியது | 0 | 2 | 0 |
| பாரிஜாதநாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் திருட்டுப் போன கும்மியும் | 0 | 2 | 0 |
| ஆர். நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை இவர்கள் பாடி வரும் சுதேச கள்ளன்பாட்டு | 0 | 2 | 0 |
| நாடகங்களில் விகடம் சில்லரைவேஷங்களில் சிலது எல்லாரும் சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும் விதூஷக ஆக்டும் உண்டு. | 0 | 4 | 0 |
| சித்தர்கள் மருத்துவ வினவிடை கும்மி | 0 | 1 | 0 |
| பார்வி இந்துஸ்தான் பதங்களும் அடங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |

184220

[illegible] பாகவதத்தில் அதிரூபார நாடக கும்மியும்
ஸ்ரீரங்கநாச்சியார் வசந்த உற்சவ கும்மியும் 0 2 0
சக்குபாய் சரித்திரம் டிராமா 0 8 0
[illegible] சரித்திரம் டிராமா 0 8 0
பாக[illegible] திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 2 0
பரங்கிப்பேட்டை—டி. ஆர். சம்பந்தா என்பவரால் இயற்றிய
பார்வதி சதாரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 2 0
[illegible] மாசில்லாத தங்கிய கீர்த்தி சிங்கமென்னும் கண்டிராஜன் திரு
புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 4 0
சக்குபாய் சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 3 0
ஸ்ரீ கண்ணன் யமுனையில் பின்னமரத்தில் [illegible]த்திய கோபிகா வஸ்
திராபஹரணம் கொம்மி 0 3 0
அதி பராக்கிரம சாலியாகிய மதுரைவீரன் திருப்புகழ் காவடிச
சிந்து வர்ணமெட்டு 0 3 0 திரிபாதனன் [illegible] காவல்ஸ் 0 4 0
சக்கிரவர்த்தி திருப்புகழ் காவடிச்சிந்து (முதல் பாகம்) 0 2 0
ஷை இரண்டாம் பாகம் 0 [illegible] 0
அநுரூப அமராவதி திருப்புகழ் காவடிச்சிந்து 0 3 0
திருத்தணிகை சுப்பிரமணியர் கீர்த்தனை திருப்புகழ் வர்ணமெட்டு 0 2 0
புதிய கலியாண வாழ்த்து ஏசல் ஓடம் லாலி ஊஞ்சல் அடங்கியது 0 2 0
செட்டி செலிக்கும் நாட்டு செலிக்கும் சண்டை 0 1 0
[illegible]ர் ஆண்டவர் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 2 0
[illegible]யகர் கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 2 0
[illegible]ப்பிரமணியர் கோத்து என்னும அட்சரமாலையும், சத்துரு சங்
காரமாலையும், சத்துருசங்கார திருப்புகழும், விநாயகர், சுப்பிர
மணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளின் அர்ச்
சனைக்குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கி
யிருக்கிறது. 0 3 0
கற்புக்கரசி என்னும் வெகு விநோத விரதபூஷணி விநோத டிராமா 0 5 0
வள்ளி சுயவரம் யென்னும் டிராமா சரித்திரம் 0 3 0
அண்ணுமலைரெட்டியார் காவடிச்சிந்து 0 2 0
[illegible]லிக் கதை 0 4 0 பவளக்கொடிசரித்திரம் டிராமா 0 3 0
பண்டரி கீர்த்தனை 0 4 0 ஆறுபாவை ஓக்கபிலேரி 0 4 0
[illegible]லிக்குத் தாலிகட்டின கதை 0 4
ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ்
காவடிச்சிந்து வர்ணமெட்டு 0 4
மயிலாமணி உபாத்தியாயரியற்றிய சிறுத்தொண்டநாடகம் 0 8
சீகாளத்திபுராணம்—வசனம், காளத்தி க்ஷேத்திரத்தில் பக்தி முக்தி
யடைந்தவரின் சரித்திரங்களின் ஜதிக படங்களுடன் உண்டு 0 [illegible]
திருவேரகம் சாமிநாதசுவாமி காவடி சொண்டிச்சிந்தும், மாரியம்மன்
காவடி சொண்டிச்சிந்தும் உள்ளது 0 1
சித்தர்கள் மகத்துவ வினுவிடை கும்மி 0 1
வல்லாள மகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும் புஸ்தகங்களை விபரமாக
எழுதினால் உடனே அனுப்பப்படும். இப்படிக்கு,

பெ - ஆறுமுக முதலியார்,

நெ. 4, பெருமாள் கோவில் தோட்டம் 2-வது சந்து, சென்னை

---

முராரி பிரஸ், சென்னை.



## புதிதாய் அச்சிடும் நூதன புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| நல்லதங்காள் சரித்திரம் (நாடகத்திற் குரியது) | 0 | 3 | 0 |
| கோவிலன் சரித்திரம் முதல்பாகம் | 0 | 3 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 3 | 0 |
| அல்லி அர்ஜுனு சரித்திரம் | 0 | 3 | 0 |
| * புதிய பார்ஸீ சதாரம் சரித்திரம் | 0 | 4 | 0 |
| * சுலோசனு சரித்திரம் (ராமாயணத்தில் ஓர்பாகம்) | 0 | 2 | 0 |
| * பார்ஸீ நூதன ஜீரானன்சரித்திரம் 1-ம் பாகம் 0-3-0 2-ம்பாகம் | | 2 | 0 |
| தேவ ரகசியமென்னும் தாராசசாங்க விஜயம் | 0 | 4 | 0 |
| [illegible] லீலாவதி என்னும் குலேபகாவலி சரித்திரம் | 0 | 3 | 0 |
| * பார்ஸீ லலிதாங்கி சரித்திரம் | 0 | 4 | 0 |
| * பாதுகா பட்டாபிஷேக சரித்திரம் | 0 | 4 | 0 |
| * சீதாப ஹரணம் சரித்திரம் | 0 | 5 | 0 |
| * வைகுந்தவாசன், கைலைநாதர், முருகக்கடவுள் பஜனைகீர்த்தனை, இதில் இந்துஸ்தான், பார்ஸீ, தில்லானு, டோம்ரி, திருப்புகழ், காவடிச்சிந்து, தேவாரம் முதலான வர்ணமெட்டுகளால் இயற்றியது | 0 | 6 | 0 |
| கபீர்தாசர் சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்துவர்ணமெட்டு | 0 | 4 | 0 |
| மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம் மதிவல்லபமங்கை மோஹனன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| ஜயதேவர் சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு மஹா பக்த விஜயத்தில் ஓர்பாகம் | 0 | 2 | 0 |
| * கீசக சம்மாரம் டிராமா, (விராட பர்வம் கதை) | 0 | 4 | 0 |
| * திருப்பதிப்பிரபாவம், திருப்புகழ் காவடிச்சிந்துவர்ணமெட்டு | 0 | 4 | 0 |
| * ஹரிஹர பக்திரஸ கீர்த்தனை, ராமாயண சொண்டிச்சிந்து | 0 | 6 | 0 |
| கருவூரார் அஷ்டமாசித்து மாந்திரீகம் | 0 | 4 | 0 |
| சுலோசனாங்கி அபூர்வ சிந்தாமணி காவல் (அருமையானகதை) | 1 | 0 | 0 |

### நூதன நாவல்களும் கதை புத்தகமும்,

### ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கனகபூஷணம 2-பாகங்கள் | 2 | 0 | தினகர சுந்தரி | 0 | 12 |
| [illegible] | 1 | 12 | சுவர்ணம்பாள் அல்லது | | |
| இரத்தினபுரி ரகசியம் | 1 | 8 | பெருவிரல் மர்மம் | 0 | 10 |
| காலசேகரன் | 1 | 4 | குணசுந்தரன் | 0 | 8 |
| வீரநாதன் | 0 | 12 | சகோதரவாஞ்சை | 0 | 4 |
| மதன பூஷணம் | 1 | 0 | அயாஷா 1-வது பாகம் 2-வது | | |
| தேவசுந்தரி | 0 | 14 | பாகங்கள் | 1 | 12 |

---

* இந்த குறியுள்ள புத்தகங்கள் அச்சிட்டுவருகிறோம். கூடிய சீக்கிரத்தில்முடியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அற்புத சுந்தராம்பை | 1 | 0 | அகடவிகட விலாசவினோத கதை | 0 | 8 |
| துயாரவன் கதை | 0 | 12 | மனோன்மணி கதை | 0 | 8 |
| மதிருதனன் | 0 | 10 | கோமளவல்லி கதை | 0 | 8 |
| ஜெகதல ஜெகஜ்ஜோதி | 0 | 8 | கனவினால் காரியத்தை முடித்த கமலவதி | 0 | 8 |
| கனகரத்தினம் | 0 | 8 | விகடவல்லி கதை | | |
| மெய்க்காதலி | 0 | 8 | | | |
| மேனுமிதுங்கி கதை | 0 | 8 | | | |
| விஞ்ஞானகானன் ஞானேந்திரி | 0 | 8 | | | |

சிவமயம்.

# விளம்பரம்.

வித்தியாப் பிரசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:

நமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், படிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசதாரருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஸ்டு பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வரும். அதனால் மேற்சொன்னபடி தபால் பில்லைகள் அனுப்பினால் நாங்கள் கட்பெட் போஸ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா கொடுத்து வாங்கிக் கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும். உங்களுடைய அட்ரஸ் விபரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்,

4-வது நெம்பர் 2-வது சந்து,

பெருமாள்கோவில் தோட்டம்,

மதுரை.